# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2000
கார்த்திகை 16
முஹறம் 11
ஞாயிறு (2-12-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 52
விலை சதம் 75


# ஜனாதிபதி ஆணைக் குழுவினால் தமிழர்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமா?

## நாம் ஒரு தனிநாட்டினம்! நமது இறைமையும் தனியானது!

''ஸ்ரீ லங்காவையும் தமிழ் ஈழத்தையும் ஒரே கூட்டுக்குள்போட்டு ஒரே முடிக்குரிய காலனி ஆக்கியவர்கள் பிரிட்டிஷாரே. 1972ஆம் ஆண்டு அவர்களுடன் எமக்கிருந்த இறுதித் தொடர்பு அறுந்தது. அச்சமயம், நாம் இருவரும் எமக்குரிய தனித் தனியான இறைமைகளை மீட்டுக் கொண்டோம். முழுத் தீவுக்கும் சேர்த்து ஒரே அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு 1972, 1977, 1978ம் ஆண்டுகளில் நாம் உங்களுடன் இணையவில்லை; எமது இறைமையில் நாம் தங்கியிருந்தோமேதவிர நாம் உங்களுடன் சேரவில்லை. எனவே புதிய குடியரசு, தீவுமுழுவதற்கும் செல்லுபடியான சட்டரீதியான, ஒன்றுக நிலைநாட்டப்படவில்லை. இப்போது பிரச்சினை உங்களுக்குப் புரிகிறதா?

''நாம் ஒரு தனி நாட்டினர்; எமது இறைமை தனியானது, எமது சுயநிர்ணய உரிமை தனியானது; நாம் கேட்பதெல்லாம்—எம்மிடம் மக்கள் ஆணை ஒன்றுண்டு. அதை நாம் கௌரவிக்கிறோம், எமக்கும் சேர்த்து ஏன் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கிறீர்கள்? எம்மைத் தனியே விடுங்கள், இதையே நாம் கேட்கிறோம். எம்மை எமது பாட்டில் விடுங்கள். உங்கள் சிவில் நிர்வாகத்தையும், உங்கள் இராணுவத்தையும், உங்கள் பொலீசையும் திரும்பப்பெறுங்கள். ''நீங்களே உங்கள் அலுவல்களை கவனித்துக் கொள்ளுங்கள்—உங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல'' என்று எம்மிடம் கூறிவிடுங்கள்!

சுதந்திரக் கோரிக்கையை இராணுவத்தினுலும், பொலிசினுலும் உங்களால் தீர்த்து விடமுடியாது,

— பாராளுமன்றத்தில் சி. கதிரவேற்பிள்ளை (22.11.79)

### பேராசிரியர் வில்சன் கருத்து!

அதிகார, நிர்வாகப் பரவல் சம்பந்தமாகத் தற்போது ஜனாதிபதியினுல் நியமிக்கப்பட்டிருக்கும் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழிவகுக்குமா? தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஈடுசெய்யுமா?

இக்கேள்விகளுக்கு மேற்படிஆணைக்குழுவில் துணைத்தலைவராகக் கடமையாற்றிய பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன் பதிலளித்துள்ளார். மூன்று நிபந்தனைகளில் அவை திருப்தியளித்தால் மட்டுமே வெற்றியடைய முடியும் என்று கூறியிருக்கிறுர் திரு. வில்சன்.

அந்த மூன்று நிபந்தனைகளும் எவை எவை என்பதையும் அவர் எடுத்துக் கூறியிருக்கிறுர். யாழ் மத்திய கல்லூரியில் அண்மையில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் பேசுகையிலேயே அவர் இதுபற்றித் தமது கருத்தை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

''ஜனாதிபதியினுல் தற்போது முயற்சிக்கப்படும் தீர்வுகள் போன்றவை முன்வைககப்படலாம். ஆனுல் மூன்று நிலைகளில் திருப்தியளித்தால் மட்டுமே அவை வெற்றியடைய முடியும்.

முதலாவது — இறைமையுள்ள தமிழ் ஈழ அரசுக் கோரிக்கையை ஈடுசெய்யக்

—8-ம் பக்கம் பார்க்க

## கிழக்கில் ஒரு கிராமத்தில் மட்டும் 1,90,000 ரூபா இலஞ்சம்!

கிழக்கு மாகாணத்தில்ஒரு கிராமத்தில் மட்டும் நியமனங்களுக்காக பலரிடமிருந்து 190.000ரூபாய்பணம் வாங்கியிருக்கிறுர் ஒருவர். இந்த அளவுக்கு லஞ்சஊழல் மலிந்து விட்டது.

—இத்தகவலைபாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அமிர்தலிங்கம் வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் தமிழ்ஈழத் தேசிய மன்றம்!

தமிழ் ஈழத்தேசிய மன்றம் அமைப்பது பற்றியும் சிறீலங்காவின் பாராளுமன்றத்தில்வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது குறிப்பிடப்பட்டது. அதுபற்றி அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஹரீந்திர கொறயா பேசினுர். அவர் கூறியதாவது;

''தமிழ்ஈழ இலட்சியத்தை அடைவோம் என்ற நம்பிக்கையின் பேரில், இச்சபையிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் சில காரியங்களைச்செய்வார்கள் என்று தமிழர்விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அதிலே கூறியிருப்பதில் ஒன்று— முந்திய சிறீலங்கா தேசிய அரசுப் பேரவையில் (அதாவதுஇன்றையபாராளுமன்றத்தில்) உறுப்பினராக இருக்கும் அதே சமயம் தமிழீழத்தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களாகவும் இயங்கி தமிழீழ அரசியலமைப்பை உருவாக்குவார்கள் என்று அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது; ஆனுல் அது நடைபெறவில்லை. அவர்கள் அது குறித்து மறுபரிசீலனை செய்தது மகிழ்ச்சிக் குரியது;

சபாநாயகர்: அது நடைபெருது என்று கூறுகிறீரா?

கொறயா: இச்சபையின் உறுப்பினராக இருக்கும் அதே சமயம், அவர்கள் இன்னும் தமிழீழ தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர்களாக தம்மைத் தாமே ஆக்கிக்கொள்ளவில்லையென்பதை மட்டுமே நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் அப்படி இயங்குவார்களா என்பதை நான் அறியேன். அவர்கள் இரு சபைகளிலும் உறுப்பினர்களாக இருந்து அனுபவிப்பார்கள். தமிழீழத் தேசிய

—8-ம் பக்கம் பார்க்க

## நொத்தாரிஸ் துரைசிங்கம் காலமானுர்!

தமிழரசுக்கட்சியின்ஆரம்பகால உறுப்பினரும் முன்னுள் மாநகரசபை உறுப்பினரும் சிறந்த பொதுச் சேவையாளருமான நொத்தாரிஸ் கி. துரைசிங்கம் அவர்கள் 28.11,79 புதன் காலை காலமானுர். நல்லூர் கல்வியங்காடு பகுதியைதமிழரசுக் கோட்டையாகமாற்றுவதற்கு ஆரம்பகாலத்தில் அல்லும்பகலும் பாடுபட்ட இவர், நல்லூர் கிராமசபையின் தலைவராகவும். சமாதான நீதிவானுகவும் திகழ்ந்தார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றன. கூட்டணித் தலைவர்கள் இரங்கலுரை நிகழ்த்துவார்கள்.

## ''ஈழத்தைக் கைவிட எமக்கு அதிகாரம் இல்லை''—செல்லத்தம்பு

''ஈழக் கோரிக்கைக் கைவிடும்படி நீங்கள் எம்மைக்கேட்க முடியாது. ஈழக் கோரிக்கையைக் கைவிடுவதற்கு எமக்கு அதிகாரம் கிடையாது, அது எமது மக்கள் எமக்குத் தந்த உத்தரவு— கட்டளை. நாம் நல்ல அயலவர்களாகவே வாழ விரும்புகிறோம். ஒரே வீட்டிலிருந்து கொண்டு சதா சண்டைபோடும் சகோதரர்களாக நாம் வாழ விரும்பவில்லை; இந்த வீட்டை உங்களுக்குத்தர நாம் தயாராக இருக்கிறோம்: இதே வளவுக்குள் தனியாக எமக்கென ஒரு குடிசை போட்டுக் கொள்ள எம்மை விடுங்கள். நாம் உங்களுக்கும் உதவுவோம். நண்பர்களாக வாழ்வோம், சிங்கள—தமிழ் இனப்பிரச்சினை தீரும்வரை நீங்கள் எத்தனை கோடியை செலவிட்டாலும் இந்நாடு அபிவிருத்தியடையாது. எம்மைத் தனித்துவமுள்ள மக்களாக ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் இந்நாட்டில், சமாதானமும், திருப்தியும்இருதேசியஇனங்களுக்குமிடையே ஏற்படும்'

—சே.மா. செல்லத்தம்பு பா.உ பாராளுமன்றத்தில் 22.11.79)

## கிழவர் கொமெய்னியின் வீரம்

'.நாம் போர்க்குணம் கொண்டவர்கள், போராடப் பிறந்தவர்கள். எமது இளைஞர் இராணுவத்தாங்கிகளுடனும் இயந்திரத்துப்பாக்கிகளுடனும் வெறுங்கையினராகப் போர் புரிந்தவர்கள். போர் ஆயுதங்கள் இல்லாமல் நாம் செயலில் இறங்க நேரிட்டாலும் நாம் போராளிகள்தாம். நாம் அனைவரும் தியாகிகளாகச் செத்தபின்னர் எமது பகைவர் எமது நாட்டை என்ன வேண்டுமானுலும் செய்யட்டும்!'

—ஈரானிய புரட்சித்தலைவர் கொமெய்னியின் வீர வாசகங்கள்.




ச. கந்தையா,
யாழ்ப்பாணம்.

கே, ஈரான்— அமெரிக்கப் பிரச்சினைபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப; இருவரில் யார் சரி, யார் பிழை என்பது ஒரு புறமிருக்கட்டும்! ஆனால் பெரிய அமெரிக்க வல்லரசை வலுச்சண்டைக்கு இழுத்துள்ள கிழவர் கொமெய்னியின் நெஞ்சுரம் வியக்கத்தக்கது,

கே; ஈரான்— அமெரிக்க மோதல் ஏற்பட்டால்அதன் விளைவென்ன:

ப: அப்படி ஒரு யுத்தம் ஏற்பட்டால், அந்த யுத்தத்தை மத அடிப்படையிலான ஒரு யுத்தமாக— இஸ்லாமியர் இஸ்லாமியரல்லாதார் யுத்தமாக— மாற்றுவதற்கு கொமெய்னி முயற்சிக்கிறார் இது உலகின் அனைத்து நாடுகளாலும் கண்டிக்கப்பட வேண்டியதொன்று. அரசியலடிப்படையிலானபோராட்டங்களுக்குள் மதத்தை இழுப்பதை நாகரிக உலகம் நிச்சயம் மன்னிக்காது;

கே; ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கொமெய்னியிடம் கையளிக்குமாறு என்ன செய்தி கொடுத்தனுப்பியிருப்பார்?

ப- நிச்சயமாக அச் செய்தி அமெரிக்காவுக்கு பாதகமானதாக இருக்காது ஏனெனில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளைதானே ஜே. ஆர், அரசாங்கம்?

* * *

க. மாணிக்கம்
கொழும்பு 12!

கே- கடந்த காலத்தில் எந்தத் தமிழ் அரசனும் இலங்கையை வெற்றி கொண்டதில்லை, என்று அரசாங்க எம்:பி· ஒருவர் பேசியிருக்கிறாரே?

ப: அவருக்குத் தெரிந்த வரலாற்று அறிவு அவ்வளவுதான், பொலன்னறுவ அனுராதபுரம் போன்ற இடங்களைத் தலைநகராகக் கொண்டு இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட ராஜ ராஜ சோழன் இராசேந்திர சோழன்கரிகாற்பெருவளத்தான் போன்ற சோழமா மன்னர்களைப்பற்றிச் சரித்திரம் பேசுகிறது, தமிழ் நாட்டிலுள்ள கரிகாலன் கட்டிய கல்லணை இலங்கையை வெற்றிக்கொண்ட வரலாற்றை இன்றும், எடுத்துப் பேசுகிறதே—

* * *

ஆர், பி. கண்ணன்,
கொட்டடி
யாழ்ப்பாணம்

கே. வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் இதுவரைஆற்றிய கூட்டணி பா.உக்களின் உரைகளில் உங்களுக்குப் பிடித்தது யாருடையஉரை!

ப- நமது சிந்தனைச்சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் தெளிவான, திட்டவட்டமான துணிச்சலான உரைதான், தமிழ் மக்கள் 1977 ஆடிப்பொதுத் தேர்தலில் கொடுத்த தமிழ்ஈழம் என்ற ஆணைக்கு அமைவாக கச்சிதமாகஅமைந்திருந்தது திரு. கதிரவேற்பிள்ளையின் உரை: மேடையில் பேசுவதை அப்படியே பாராளுமன்றத்திலும் பேசியிருக்கிறார் கதிரவேற்பிள்ளை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து கிஞ்சிற்றும் பிறழாமல் அதை அழுத்தமாகவும் திருத்தமாகவும் எடுத்துக் கூறி ஏனைய கூட்டணிப் பா, உக்களுக்கு ஒரு முன்மாதிரி காட்டியுள்ள கதிரவேற்பிள்ளைக்கு ஒரு சபாஷ்.

* * *

ஏ· முரளிதரன்.
எஸ். தவம்,
ஆறுமுகத்தான் குடியிருப்பு

கே;உலகளாவிய தமிழை தமிழர்கள் மறக்கும் நிலை மாற வேண்டும் என அண்மையில் இங்கு வந்த ம. பொ. சி, கூறியுள்ளாரே— இதை அவர் யாருக்கு முக்கியமாகக் கூற வேண்டும்.

ப; தமிழ்நாட்டில்ஹிந்தி ஆங்கில வடமொழிமோகத்திலும் இங்குசிங்களமோகத்திலும் மூழ்கியிருப்போருக்கும், தமிழுக்குப்பாடைகட்டுவோருக்கும் பல்லக்குத் தூக்குவோருக்கும்!

கே, தமிழ்ப் பெரியார்களுக்கு முத்திரை வெளியிடடால் மட்டும் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடுமா?

ப: சுதந்திரம் என்ற பலகாரத்தைக் கோரிநிற்கும் தமிழனுக்கு முத்திரைவெளியிடுவது போன்ற சிலுசிலுப்பைக் காட்டுகிறார்கள் ஆட்சியாளர்கள், இதனால் எல்லாம் விடுதலைப்பசி ஆறப் போவதில்லை. முத்திரை, இங்கு நடைபெறும் இன ஒடுக்கலை மறைக்க ஆட்சியாளர்போடும் முகத்திரை!

* * *

எஸ்‘ உதயகுமாரன்
ஆறுமுகத்தான் குடியிருப்பு

கே, இம்முறை பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக அளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதே, சிறீலங்கா எந்த நாட்டுடன்போரிடப் போகிறது?

ப: இதுகூடத் தெரியாமலிருக்கிறீர்களே தமிழ் ஈழத்தில்வாழ்ந்துகொண்டு?

* * *

வே; கிருஷ்ணனந்தம்
புதுக்குடியிருப்பு

கே. பௌத்த மதத்தைத் தமிழ் மக்களிடம் புகுத்துவதால் தமிழினப் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று அரசாங்க எம்,பி ஒருவர் கூறிய ஆலோசனை எப்படி?

ப: சகல மக்களும் ஒரே மதத்தவர்களாக இருந்தால் அவர்களிடையேபிரச்சினைகள் ஏழாது என்பது உண்மையானால்— இஸ்லாம் மதத்தை சேர்ந்த பாகிஸ்தானியரும், பங்களாதேஷ் மக்களும் ஏன் தனியாகப் பிரிய நேரிட்டது? கனடாவில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ‘குவிபெக்’ பிரெஞ்சுக்காரர்கள்அதேகிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த கனேடிய ஆங்கிலேயர்களை விட்டுப் பிரிந்து தனிநாடு அமைக்க ஏன் போராடுகிறார்கள், மதத்தால் மட்டும் மக்களை இணைத்து விட முடியாது,

* * *

இ. ஜெயபாலன்
பருத்தித்துறை

கே: அமைச்சர் சிறில் மத்தியூபற்றிச் சில வரிகள்.

ப, தமிழ்த்தேசிய உணர்வின் உந்து சக்தியாக விளங்குபவரே அவர்தான். அவர் பாராளுமன்றத்தில் வாய் திறக்கும் போதெல்லாம் தமிழினம் எழுச்சியடைகிறது. நமது எம். பிக்களுக்கும் அப்போதுதான் வேகம் பிறக்கிறது. அவர் வாழ்க!

* * *

செல்வி- பி. தமிழ் வாணி
மத்தியஸ்விதி
மட்டுநகர்

கே: தமிழிழ விடுதலை வீரர்களின் அலங்காரமான தோள்களுக்கு கூட்டவேண்டிய மணமாலைகளை ஏன்சில கன்னியர் பச்சோந்திகளின் தாழ்ந்த கைகளில் சூட்டி விடுகிறார்கள்?

ப; அப்படிப்பட்ட பச்சோந்திகளையும் விடுதலை வீரர்களாக மாற்றுவதற்காகவும்இருக்கலாம். பெண் நினைத்தால் எதைத்தான் சாதிக்கமுடியாது; கோழையை வீரனாக்குவதும் பெண்தான்— வீரனை கோழையாக்குவதும் பெண்தான்!

* * *

ச, சுப்பிரமணியம்
கொழும்பு

கே; மொறட்டுவ பல்கலைக்கழக சிங்கள மாணவர்களின் பிரச்சினையில் சிங்களத் தலைவர்களால் சாதிக்க முடியாததை எதிர்க்கட்சித் தலைவர் திரு.அமிர்தலிங்கம் சாதித்து விட்டாரே!

ப: ஆம் எட்டுநாட்களாக கூரைமீது உண்ணாவிரதம் இருந்து உடல் நிலை மோசமடைந்திருந்த மாணவர்களைச் சந்திப்பதற்குத் தாமும் கூரைக்கு ஏறிச் சென்று அவர்களைச் சந்தித்து அளவளாவிய எதிர்கட்சித்தலைவர் திரு·அமிர்தலிங்கத்தின் எளிமையையும் பெருந்தன்மையையும் கண்டு சிங்கள மாணவர்கள் அசந்து போய்விட்டார்கள். உண்ணாவிரதமிருந்த ஏழு மாணவர்களின் உயிரையும் காப்பாற்றியபெருமை திரு: அமிர்தலிங்கத்துக்கே உரியது. இளையதலைமுறையினருக்கும் திரு. அமிர்தலிங்கத்துக்கும் எப்பொழுதுமே இராசிப்பொருத்தம்உண்டு: அமிரைப்போல ஒருதலைவர் தமதுஇனத்துக்குள் இல்லையேயென்று மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் சிங்கள மாணவர்கள் பலர் பின்னர் தமக்குள் பேசி மனம் வருந்தினராம், அவர்கள் திரு. அமிர்தலிங்கத்துக்கு வீரவரவேற்பு அளித்ததாக ‘வீக்எண்ட்’ பத்திரிகையும் எழுதியுள்ளது.

★ கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்

15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம்

# தமிழர்கள் இலங்கையை ஆண்டதாக சரித்திரமே கிடையாதாம்!

## பாராளுமன்றத்தில் பிரதியமைச்சர் பேர்சி பேச்சு

“வெளிநாட்டுப் பத்திரிகைளில் தமது பேச்சு வெளிவர வேண்டும் என்பதற்காகவே கோப்பாய்த் தொகுதி உறுப்பினர் உரையாற்றினார். இங்குள்ள இரு இன மக்களிடையே பிளவு இருப்பதாகக் காட்டி வெளிநாட்டு உதவிகளைத் தடுக்க அவர் முயல்கிறார்.

பொதுநிர்வாகஉள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் திரு, பேர்சி சமரவீர இவ்வாறு சபையில் பேசினார்:

திரு: பேர்சி சமரவீர தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:—

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இதற்கு முன் இங்கு தனித் தமிழ் ஈழப் பேச்சு எடுத்த போதெல்லாம் இனிமேல் அதுபற்றி பேசக்கூடாது என்று அரசதரப்பு எம்பிமார் கூறி வந்திருக்கிறார்கள்.

வியாழனன்றுகாலைபேசிய கோப்பாய் உறுப்பினர் இலங்கையில் இரு நாடுகள் இருப்பது போலவும் சிங்கள தமிழ் மக்களிடையே பிளவு ஏற்பட்டால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சமாதானம் நிலவமுடியாதுஎன்றும் பிளவு ஏற்பட்டால் வெளிநாட்டுத் தலையீடு ஏற்படும் என்றும் கூறினார்,

விஜயனுக்குப் பிறகே நம் நாட்டு வரலாறு தொடங்குகிறது அந்த வரலாற்றில் யாழ்ப்பாணம் யாபாபடுந என்றேகுறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிங்களமன்னர்கள் காலத்தில் இலங்கை மாயா, பிஹிட்டி ருஹுணு என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தமிழர்கள் இலங்கையை ஆண்டதாக சரித்திரத்தில் ஆதாரம் கிடையாது.

சரித்திரமே இப்படி இருக்கும் போது இவர்கள் இரு நாடுகளைப்பற்றி எப்படிப் பேசமுடியும். இப்படிப்பேசினால் இங்கு சமாதானமும் அமைதியும் நிலவுமா?

வட்டுக்கோட்டை உறுப்பினரைப் போல் உரிய முறையில் சலுகைகள் கேட்டால் நாம் வழங்கத் தயாராகவே இருக்கிறோம்,

கோப்பாய் உறுப்பினர் இங்கு பேசியது வெளிநாட்டுப் பத்திரிகைகளில் தமது பேச்சு வெளிவர வேண்டும் என்பதற்காகவே. இந்நாட்டில் இரு இனமக்களிடையே பிளவு ஏற்பட்டு போராட்டம் நடக்கிறதுஎன்று வெளி உலகுக்குக் காட்டி நமக்குக் கிடைக்கும் வெளிநாட்டுக் கடன்களை அவர் தடுக்க முயல்கிறார்,

இப்போது கோப்பாய் உறுப்பினர் சபையில் இல்லை அவர் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்;

இந்நாட்டுச். சிங்களவர்கள் இந்நாட்டில் இரு நாடுகள்இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வில்லை;

அவர் குறிப்பிட்ட வெளிநாட்டுத் தலையீடு எதுஇதன் அர்த்தம் என்ன?இங்கு பிரசன்னமாயிருக்கும் ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களால் அதற்கு விளக்கம்தர முடியுமா?

இப்படி பிரதியமைச்சர் திரு: பேர்சி சமரவீரசொன்னார்.

# "எமது நாட்டை மீட்கவே போராடுகிறோம்! ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒத்துப்போகவே முடியாது!"

இன்று ஸ்பெயின் நாட்டிலே 'பாஸ்க்' என்ற தேசிய இனத்தினர் விடுதலைக்குப் போராடுகின்றனர். 190பேர் அங்கே வன்முறையை நாடும் விடுதலை வீரர்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கொலையுண்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (SECURITY OFFICERS) இன்றைக்கு அந்த பாஸ்க் தேசியமக்களுக்கு சுயஆட்சி கொடுக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் சுய ஆட்சி போதாது. தனிஆட்சி வேண்டும் என்று கேட்கின்றனர். அதேபோல நாம் இங்கு அஹிம்சை வழியிலே நாம் இழந்த எமது நாட்டை. மீண்டும் பெறப் போராடுகிறோம்.



## பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம்

—இவ்வாறு பாராளுமன்றத்திலே 20.11.79ல் உரையாற்றிய காவலூர் பா,உ- பண்டிதர் கா,பொ. இரத்தினம் கூறினார் அவர் மேலும் கூறியதாவது:—

இந்த வரவு செலவுத்திட்டத்திலே இப்பொழுது தமிழ்ப் பகுதிகளிலே படைகளைக் குவித்து அந்தப்படைகளை வைத்து தமிழர்களின் உரிமைகளை அடக்கி ஒடுக்கி விடலாமென்று எண்ணி பாதுகாப்பு செலவினத்திற்காகக் கூடுதலாக, செலவு செய்கிறீர்கள். 1978 ஆம் ஆண்டில் இந்த அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு 56 கோடியே 60 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை......

கப்டன் செனிவிரத்தின: வடக்கில் தமிழர்களை நசுக்கவே இராணுவம் நிலைகொண்டிருப்பதாகக் கூறுகிறீர்களா?

கா.பொ, இரத்தினம்;— ஆம் அங்குஇராணுவம் நிலைகொண்டுள்ளது ஆக்கிரமிப்பு இராணுவம் என்றே அதை நாம் கருதுகிறோம். அதுவே எமதுகருத்து·அங்கு இராணுவ கவர்னரையும் நியமித்திருக்கிறீர்கள். 1979ம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட பணம் 73 கோடியே 27 இலட்சம்; 1980ம் ஆண்டிலே 100 கோடி 53 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது நடப்பு ஆண்டைவிட அடுத்த ஆண்டுக்கு 27 கோடி ரூபாவை பாதுகாப்புக்குக் கூடுதலாக செலவு செய்யத்திட்டமிட்டிருக்கிறீர்கள், இந்த நாட்டிற்கு எங்கேயிருந்து ஆபத்து இருக்கிறது என்று கேட்கவிரும்புகிறேன்,

நேற்று இங்கு பேசிய ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் பலர் சிறப்பாக கொழும்பு மாவட்டஅமைச்சர் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களோடு ஒத்துழைக்கவேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

எனக்குப்பின்னால் வீற்றிருக்கும் சிலாப உறுப்பினர் (திரு, ஹரேந்திரகொறயா) ஏன் அரசாங்கத்துடன் நாம் ஒத்துழைக்க முடியாது என்று கேட்கிறார். ஒத்துழைப்பு என்பது இருதலைப்பட்டது, ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒத்துழைக்க முடியாது. பச்சைமண்ணும் சுடுமண்ணும் சேர முடியாது; புலியும் புல்வாயும் ஒத்துழைக்க முடியாது, சமமாக, சமத்துவமாக இருக்கும் மக்களிடையேதான் ஒற்றுமை ஏற்படும்;

இந்நாட்டிலே சிங்கள இனத்துக்கும் தமிழினத்துக்குமிடையே பிரச்சினை இருக்கிறது என்று நான் மட்டும் சொல்லவில்லை. இந்த அரசாங்கமே அதனதுதேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரச்சினை இருக்கிறது என்றுசொல்கிறது ஆனால் அதனை இன்று வரை தீர்க்கவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது. நெஞ்சைத் தொட்டு சொல்லுங்கள்.

இப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்றுகூறிய மாண்புமிகு சனாதிபதி அவர்களே எங்கள் தலைவர் காங்கேசன்துறை உறுப்பினர் திரு, ஏ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலே சில பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லைஎன்பதை ஏற்றுக் கொண்டார்.

அடுத்து ஆட்சியைப் பன்முகப்படுத்த வேண்டும் எல்லா மாவட்டங்களிலும் மக்கள் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு ஒருமுயற்சி எடுக்கப்படுகிறது அதன் முடிவு எப்படியோ தெரியாது;

இங்குள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சபைக்குப் புதிதாக வந்தவர்கள். நாம் 1965 ஆம் ஆண்டிலே ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அரசாங்கம் அமைத்த செய்தி அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

அன்று நாம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்தோம்; உடன்படிக்கை எழுதினோம். 1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்து இந்நாட்டை ஆளக்கை கொடுத்தோம். எங்கள் உதவிஅன்று இல்லாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்திருக்க முடியாது.

கொஞ்சம் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். 1970 ஆம் ஆண்டு சரித்திரத்தோடும் 1977 ஆம் ஆண்டு சரித்திரத்தோடும் நின்றுவிடாமல் 1956 ஆம் ஆண்டு சரித்திரத்தை1948 வரையிலுள்ள சரித்திரத்தைப் படித்துப்பார்த்தால் நாம் சிங்கள அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தோம் என்று மனச்சாட்சியுள்ள எந்த ஒரு மனிதனாவது சொல்ல முடியாது. ஒத்துழைத்தோம், உடன்படிக்கை எழுதி ஒத்துழைத்தோம். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை, இடையிலே விட்டுவிட்டு வந்தோம். இது நாம் கண்ட பலன்;

1965 ஆம் ஆண்டு நாம் ஒத்துழைத்ததன் பயனாக 1966 ஆண்டு தமிழ் மொழி விசேட சட்டப் பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றை நிறைவேற்றிய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை என்று அன்று பிரதமராக இருந்து தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சியில் அமர்ந்த திருவாளர் டட்லி சேனநாயக்கா கேட்ட ஒரு கேள்விக்குதிரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா மறுமொழி சொன்னார்,'உங்கள்அரசாங்கம் போல எங்கள் அரசாங்கமும் அவற்றை நடைமுறைப்படுத்தாது' என்று அவர் மறுமொழி சொன்னார். திருவாளர் டட்லி சேனநாயக்கா இரண்டாவது கேள்வி கேட்கவில்லை; வாய்மூடி மௌனியானார். நீங்கள் அஞ்சாட்டைவாசித்துப் பார்க்கலாம்; ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றிய அந்தப் பிரமாணங்களை அந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த நேரத்திலேயே நடைமுறைப்படுத்தவில்லை,

எனவே, எப்படி நாங்கள் உங்களோடு சேர்வது? அந்தக் காலத்திலே நான், அந்தப் பிரமாணங்களை நடைமுறை''படுத்தாமை பற்றி 200, 300 கேள்விகள் வரை கேட்டிருப்பேன் ஒவ்வொரு அமைச்சரையும் கேட்டிருக்கிறேன். ஆனால், எங்களுடைய முயற்சி எதுவும் பெரும்பயன் தரவில்லை; அந்தப் பிரமாணங்களும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

அது மட்டுமல்ல, மாவட்ட சபை தருகிறோம் என்று சொன்னார்கள். மாவட்ட சபை தருவதாகச் சொல்லி ஒப்பந்தமும் செய்தார்கள். நன்றியை மறந்து, மாவட்ட சபை பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை மாத்திரம் தந்து விட்டு அதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை வந்துவிட்டது என்று சொன்னார்கள்.

இந்தவரலாற்றை மறைக்காதீர்கள். தெரியாதவர்கள் கடந்த கால வரலாற்றைப் படித்துப்பாருங்கள். நாங்கள் ஒத்துழைக்க மறுக்கவில்லை. ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த உலகத்தை ஒன்றாகக் கண்ட ஒரு பண்பாட்டின் பின்னணியிலே வந்த தமிழ் இனம் ஒற்றுமையைத் தான் கருதுகிறது. இந்த ஒற்றுமை இசைந்த ஒற்றுமையாக இருக்க வேண்டும். நான் முன்னர் கூறியதுபோல ஓநாய்க்கும் ஆட்டுக்குட்டிக்கும் இடையேயுள்ள ஒற்றுமையாக இருக்கக்கூடாது. சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாது.

''உடன்பாடு இல்லாதவர்
வாழ்க்கை
குடங்களுள் பாம்போடு
உடனுறைந்து அற்று''

என்று வள்ளுவர் சொல்கிறார். ஒற்றுமை இல்லாதவர்கள் ஒன்றாக வாழ்வது ஒரு குடிசையில் பாம்போடு இருப்பது போல் இருக்கும் என்கிறார் அவர்.

1972 ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு ஒருபுதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபொழுது, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்தபொழுது எங்களுக்குக் கடிதம் எழுதி அரசியல் நிருணய சபையிலே எங்களையும் சேரச் சொன்னார்; எங்களுடைய கட்சியிலே இரண்டு கருத்திருந்தன; சேருவதா சேராமல் விடுவதா என்று; எனினும் நாம் ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக அரசியல் நிர்ணய சபைக்குப் போனோம். ஆனால் அங்கேஎங்களுடைய மொழியுரிமை, எங்களுடைய ஆட்சி உரிமை, எங்களுடைய குடியுரிமை, எங்களுடைய நில உரிமை எல்லாவற்றையும் மறுக்கும் முறையிலே அரசியலமைப்புத் திட்டம் உருவானது. அதனால் இடையிலேவெளியேறினோம்.

இப்படியாக அவ்வப்பொழுது நாங்கள் படித்த பாடங்கள் ஏராளம். வட்டமேசை மகாநாடு ஒன்றைக் கூட்டி, எல்லாக் கட்சிகளையும் கூட்டி, தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று சொன்ன ஐக்கிய தேசியக்கட்சி, அதைவிடுத்து பாராளுமன்றக் குழு ஒன்றை நியமித்து அதன் மூலமாக எங்களுடையபிரச்சினையைத் தீர்க்கலாம் என்று கூறிய பொழுது அதில் பங்கு பற்ற மறுத்தோம். இது தான் காரணம் என்பதை இன்றும் விளங்காமல் தங்களைத் தமிழர்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிற சில அமைச்சர்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன். ஆகவே தான் இதில் போய்ச் சேர்ந்தால் எதுவும் நடக்காது என்று சொன்னோம்.

இந்த அரசாங்கம் தமிழ் மொழி உரிமைக்கு சில சரத்துக்களை அரசியலமைப்பிலே சேர்த்திருக்கிறது. தமிழ் தேசியமொழியாக்கப்பட்டிருக்கிறது. தமிழைத் தேசிய மொழியாக்கி விட்டோம் என்று சொல்லி பிறநாடுகளில் இதை விற்கப் பார்க்கிறார்கள். தேசிய மொழி என்று சட்டத்திலே எழுதியிருந்தால் மாத்திரம் என்ன பயன்? இன்றும் எங்களுக்கு தனிச் சிங்களத்திலேதான் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இன்று சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தான் யாழ்ப்பாண மாவட்டம் ஆளப்படுகிறது; மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழிலே ஆட்சி நடைபெறுகிறதா?

இதுபற்றி சனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். நீங்கள் அரசியலமைப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்த விரும்பினால் ஒரு கிழமையில் செய்ய முடியும் என்று எழுதினேன். இந்த அரசாங்கத்திலே எங்களுக்குச்செல்வாக்கிருக்குமானால் இந்த அரசாங்கம் எங்கள் அரசாங்கம் என்று சொல்ல எங்களுக்கு உரிமை இருக்குமானால், இந்த அரசாங்கம் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்குரிய அரசாங்கமாக இருக்குமானால் ஒருமாதத்துக்குள் அவற்றை நடை முறைப்படுத்த முடியும் என்பதை சொல்லி வைக்க விரும்புகின்றேன். எங்களுடைய மனம் புண்பட்டிருக்கிறது; அரசியலமைப்பிலே நீங்கள் எழுதிய உரிமைகளை எந்த விதத்திலும் எங்களுக்குத்தரவில்லை.

இதற்குமாறாக என்ன செய்தீர்கள்?

யாழ்ப்பாண மாவட்டத்தை தனி மாவட்டமாக்கினீர்கள். அங்கு அவசர கால சட்டத்தை வைத்து, ஒருபோர்ப்படை ஆட்சியை புகுத்தி, இந்த நாட்டில் இருந்து அதைப் பிரித்து, இரண்டு மாவட்ட அமைச்சர்களை அமைத்து ஒரு வருடத்திலே மூன்று அரசாங்க

—4-ம் பக்கம் பார்க்க

# எண்ணம்

## கூட்டணிப் பா. உ.க்களுக்கு ஒரு சபாஷ்!

இம்முறை வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது — பாராளுமன்றத்தையே ஒரு கலக்குக் கலக்கி விட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவினரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை இயக்கம் என்கிற அளவிலும், அவர்கள் தமது கடமையைச்செய்திருக்கிறார்கள்; தீவின் அதிகார பூர்வமான எதிர்க்கட்சியென்ற முறையிலும் அவர்கள் தமது கடமையை சிறப்பாக ஒப்பேற்றி இருக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக்கூட்டணி தான் ஏற்றுக்கொண்டிருக்கும் முடிந்த முடிபான தமிழீழ இலட்சியத்திலிருந்தும், 1977-ஆம் ஆண்டு தமிழ் மக்கள் கூட்டணிக்கு அளித்த ஆணையிலிருந்தும் கிஞ்சிற்றும் நழுவாது; விலகாது; தமிழீழ விடுதலையையே நாடிச் செல்லும் என்பதை மிகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தனக்கேயுரிய நிதானத்துடனும் கூட்டணியின் மூத்த தலைவர்களிலொருவரான சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் பாராளுமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்.

இலங்கை ஒரே நாடென்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கவில்லையென்பதையும், இரண்டு நாடுகளைக் கொண்ட ஒரு தீவுதான் இலங்கையென்பதையும் திரு. கதிரவேற்பிள்ளை மீண்டும் பாராளுமன்றத்திலே நிலைநாட்டியிருக்கிறார்.

தமிழீழக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதற்கு கூட்டணிப்பாராளுமன்றக் குழுவுக்கு துளியும் அதிகாரம் இல்லையென்பதை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், முல்லைத்தீவு பா. உ. திரு. செல்லத்தம்பு, யாழ். பா. உ. திரு. யோகேஸ்வரன் ஆகியோரும் அழுத்தம் திருத்தமாக பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைப்போராளிகள் என்ற முறையில் மேற்கண்டவாறு இலட்சிய முழக்கமிட்ட கூட்டணிப் பா. உ.க்கள், எதிர்க்கட்சியென்ற முறையில் நாட்டில் நிலவும் இலஞ்சலாவண்யத்தையும், ஊழலையும் எதிர்த்து ஒரு பெரிய போரையே பாராளுமன்றத்தில் நடத்தி முடித்திருக்கின்றனர்.

ஐ. தே. கட்சி ஆட்சியின் கீழ் இடம்பெற்றுவரும் ஊழல்களையும், நிர்வாகச் சீர்கேடுகளையும். இலஞ்சக் கொடுமைகளையும் தாம்நிரூபிக்கத்தயாராக இருப்பதாக கூட்டணிப் பா. உக்கள் சவாலுக்குமேல் சவால் விடுத்த போது ஆளுங்கட்சியினரால், ஆத்திரமும் கூச்சலும் போட முடிந்ததே தவிர—அதை மறுத்திட முடியவில்லை.

ஆசிரிய நியமனங்களிலும், மற்றும் அரச உத்தியோக நியமனங்களிலும், இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழலையும், இலஞ்சத்தையும் எதிர்த்து பண்டிதர் இரத்தினம், பருத்தித்துறை துரைரத்தினம், முல்லைத்தீவு செல்லத்தம்பு, பட்டிருப்பு கணேசலிங்கம், கிளிநொச்சி ஆனந்தசங்கரி, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு, திருகோணமலை சம்பந்தன் ஆகியோர் அடுக்கடுக்காகத் தாக்குதல் நடத்தியதுடன், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவரும் தமது பாசுபத அஸ்திரத்தைத் தொடுத்தார்.

எதிர்க்கட்சியினர் சுமத்திய ஊழல், இலஞ்சக்குற்றச்சாட்டுக்களை மறுக்கத்திராணியற்ற அரசாங்கம், எதிர்க்கட்சியினரின் கிடுக்கித் தாக்குதலுக்குள் பலமாகச் சிக்கிக் கொண்ட காரணத்தினால், வேறு வழியின்றி இலஞ்சம், ஊழல் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஓர் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு முன்வந்திருக்கிறது.

எதிர்க்கட்சியினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்த விசாரணையின்போது சாட்சியமளிப்போரின் வேலைபறிமுதலாகாது என்றும், அவர்களுக்கு வேறு எவ்வித ஆபத்தும் வராதென்றும் அரசின் சார்பில் பிரதமர் பிரேமதாசா பாராளுமன்றத்திலே உறுதியளித்துள்ளார்.

எனவே எதிர்க்கட்சியினர் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது ஊழல், இலஞ்சத்துக்கு எதிராக நடத்திய போராட்டம் பாராளுமன்ற அளவில் வெற்றியடைந்துள்ளதென்றே கூறவேண்டும். இனி அதை முழுவெற்றியடையச் செய்வது பொறுப்புணர்வுள்ள பொது மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கிறது.

இலஞ்சம் இந்நாட்டின் பொது வாழ்வில் ஒரு புற்றுநோய்; அதை எப்படியும் அழித்தொழித்தேயாக வேண்டும். எனவே அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளபடி இலஞ்ச விசாரணைக் குழு அமைக்கப்பட்டவுடன், இலஞ்சம் கொடுத்து வேலை பெற்றோரும், லஞ்சம் கொடுத்து வேலை கிடையாமல் ஏமாற்றப்பட்டோரும், இலஞ்ச ஊழல் குறித்து தகவல் தெரிந்தோரும், அச்சமின்றித் துணிச்சலுடன் சமூக விரோதிகளை அடையாளம் காட்ட வேண்டும். இலஞ்சப் பேய்களை சந்தியில் நிறுத்திச் சவுக்கால் அடிக்க வேண்டும். அப்போதுதான் இத்தீவில் பொது வாழ்வு புனிதமடையும்.

வரவு செலவுத் திட்டவிவாதத்தில் இலஞ்சத்துக்கு எதிராக பீரங்கித் தாக்குதல் நடத்திய கூட்டணிப் பா. உக்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்.

# மனித உரிமை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்!

மனித உரிமை நாளை ஆண்டாண்டு தோறும் கொண்டாடிவிட்டால் மட்டும் போதாது; மனித உரிமைப்பிரகடனங்கள் குறித்து மேடைகளில் மணிக்கணக்காக பேசிவிட்டால் மட்டும் போதாது மனித உரிமைகள் என்பன மக்களிலிருந்து பிரிக்கமுடியாதன; மக்கள் அன்றுடம் அனுபவிக்க வேண்டிய உரிமைகளே மனித உரிமைகள்; இந்த உரிமைகளுக்கு தடை ஏற்படும்போது, இந்த உரிமைகள்மறுக்கப்படும்போது மக்கள் சமுதாயம் அதைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது, அவற்றை மீண்டும் அனுபவிப்பதற்கு உறுதி பெறவேண்டும்- அத்தகைய அருட்டுணர்வை சாதாரண மக்களுக்கு ஏற்படுத்திட வேண்டும்— அதற்கோர் இயக்கம் தேவை: என்ற சாரப்பட சில கிழமைகளுக்கு முன்னர் சுதந்திரனில் நமது எண்ணத்தை வெளியிட்டிருந்தோம்.

இனங்களுக்கிடையேநீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் வடபிரதேசக் கிளையினர், இதுகுறித்துத் தம் சிந்தனையைச் செலுத்தி. வடபகுதியிலுள்ள அனைத்து அரசியற்கட்சிகள் இளைஞர் இயக்கங்கள், மகளிர் இயக்கங்கள் பொதுமன்றங்கள் மாணவர் இயக்கங்கள் அனைத்தையும்கூட்டி, ஆராய்ந்து மறுக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுமாறு கோரி டிசெம்பர் 9ம் திகதி ஓர் அடையாள உண்ணுவிரதத்தை நடத்தவும் டிசெம்பர் 10ம்நாள் பொதுக் கூட்டத்தை நடத்தவும்மேற்கொண்டிருக்கிறமுடிவினைப் பாராட்டுகிறோம்,

இம் மாதிரியானதோர் இயக்கம்வடபகுதியில் ஆரம்பமாவதுதான் இன்றைய சூழ்நிலையில் பொருத்தமானதாகும்,

### தணிக்கை

பேச்சுரிமை,
எழுத்துரிமை,
பிரசார உரிமை,
வெளியீட்டு உரிமை:
பத்திரிகை சுதந்திரம்,
கூட்டம் கூடும் சுதந்திரம்!
நீதிபெறும் சுதந்திரம்
வீட்டில் நிம்மதியாகத் தூங்கும் சுதந்திரம்

போன்ற அனைத்து உரிமைகளுமே அவசரகாலச் சட்டப் பிரகடனத்தினுல் இன்று செயலிழந்துள்ளன. இந்நிலையிலே மனித உரிமைகளை நிலைநாட்டுமாறு கோரும் இயக்கம் வடக்கே ஆரம்பமாவதுதான் பொருத்தமானதாகும்.

பயங்கரவாததடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள்சட்டம் அவசரகாலச்சட்டம், இரண்டும் அகற்றப்பட வேண்டும்.

மேற்படி சட்டங்களின் கீழ் கைதாகியுள்ளயாவரும் உடனடியாக நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லதுஅவர்கள்மீது நீதி விசாரணை நடைபெற வேண்டும்.

பத்திரிகைத்தணிக்கைநீக்கப்பட வேண்டும்—

அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம் அகற்றப்படவேண்டும்—

என்று இன்னோரன்ன காரணங்களுடன், இலங்கை அரசியல் அமைப்பின் 11ம் பிரிவுக்கு முரணுக மக்கள் சித்திரவதை செய்யப்படுவதைக்கண்டித்தும். டிசெம்பர்9ம்திகதியைபிரார்த்தனை தினமாகவும் உண்ணுவிரத நாளாகவும் அனுட்டிக்கும்படி இனங்களுக்கிடையே நீதி சமத்துவத்துக்கான இயக்கத்தின் வடபிரதேசக் கிளை கோரியுள்ளது.

அன்றையதினம் (டிசெம்பர்9) அனைத்து அரசியற்கட்சிகள் பொதுமன்றங்கள், இளைஞர். மகளிர் இயக்கங்களின்ஆதரவுடன் இந்து, இஸ்லாமிய கிறிஸ்தவ ஆலயங்களில் பட்டினிப்போராட்டத்தை நடத்தவும் மேற்படி இயக்கம் முடிவு செய்துள்ளது.

இந்த இயக்கத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, மற்றும் அரசியல் இயக்கங்கள்; பொதுமன்றங்களின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக அறிஞர்கள்பங்குபற்ற விருக்கின்றனர்.

மனித உரிமை உணர்வை மக்களுக்கு ஊட்டும் இந்த இயக்கம் மேலும் வலிவும் பொலிவும் பெறமனித உரிமைநாளான டிசெம்பர்10ம் நாளன்று மனித உரிமைகளில் அக்கறையுள்ள ஏடுகள் சிறப்புக்கட்டுரைகளையும் வெளியிடுவது, இந்த இயக்கம் மேலும் மக்களினதும்உலகினதும் அரசினதும் கவனத்தை ஈர்க்கஉதவும்-

—கோவை

# எமது நாட்டை மீட்கவே போராடுகிறோம்!

—3-ம் பக்கத் தொடர்

அதிபர்களை அங்கே அனுப்பிவிட்டு, கடைசியாக எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால் போல் தேர்தலிலே தோற்ற ஒருவரை, யாழ்ப்பாணத் தொகுதிகளிலேயுள்ள நாம்அத்தனைபேருமே எதிர்த்ததையும் பொருட்படுத்தாமல் உங்கள் கட்சியின் பொம்மையாக அங்கே வைத்து உங்களுடைய கட்சியை வளர்க்கிறீர்கள். ஒரு கிழமைக்கு 500 பேரை ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சேர்த்து தருகிறேன் என்று சொல்லித்தான் அவர் அங்கே அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார்.

இப்படியெல்லாம் நீங்கள் செய்துவிட்டு ஒத்துழைப்பைப்பற்றி எப்படிப் பேசலாம்? இதுவரையிலே எந்த மாவட்டத்திலும், அல்லது இலங்கையின் எந்தப் பகுதியிலும் செய்யப்படாதவகையிலே தேர்தலிலே தோற்கடிக்கப்பட்ட ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நாங்கள் உணர்ச்சியோடுதான் பேசுகிறோம். எங்கள் மனம் புண்படுத்தப்படுகிறது.

இன்று கூடப் பத்திரிகைகளிலே செய்தி வந்தது. பருத்தித்துறையிலே பொலிசார் பெரிய அட்டூழியங்களைச் செய்கின்றார்கள் என்று: இப்படியாக நீங்கள் எங்களுடையமக்களிடையே காழ்ப்பை உண்டாக்கி, எங்களுடைய மக்களிடையே; வெறுப்பை உண்டாக்கி, பயங்கரவாதம்என்ற போர்வையிலே எங்களுடைய மக்களை அடக்கி, ஒடுக்கி ஆண்டால் அது ஒரு போதும் உங்களுக்கு நன்மையை அளிக்காது. நீதியை நீதியால்தான் வெல்லலாம். பயங்கரவாதத்தை ஒருநாளும் பயங்கரவாதத்தினுல் வெல்ல முடியாது. இது பௌத்த பெருமானுடைய கொள்கை அன்புக்கொள்கை.


நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் கூறியது போல இன்று கியூபெக மாகாணத்திலே என்ன நடக்கிறது? எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்ட ஒரு இனம்-எல்லா முறையிலும் உரிமைபெற முயல்கின்ற ஒரு இனம்—அஹிம்சை வழியில் நம்பிக்கையுள்ள ஒரு இனம், தன்னுடைய உரிமையைப் பெறும்வரை மனத்துக்குத் திருப்திவரும் வரை, நெஞ்சுக்கு நிறைவு வரும் வரை போராட்டத்தை தொடர்ந்து நடத்தும்.

இந்த வரலாறு 1956 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்கிறது. இன்று வரையும் இந்த நாட்டிலே ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எல்லாம்—அது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாக இருந்தாலும் சரி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமாகவிருந்தாலும்சரி, கூட்டு முன்னணி அரசாங்கமாக இருந்தாலும் சரி — ஆட்சிக்கு வரும்போது எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்லுவார்கள். வந்த ஒரு ஆண்டுக்குப் பின்னர் உங்களை நசுக்குகிறோம், உங்களை அடக்குகிறோம்என்று சொல்லுவார்கள். இப்படியாக முயன்ற அரசாங்கங்கள் எல்லாமே அழிந்தனவேயொழிய நாங்கள் ஒழியவில்லை. நாங்கள் ஒழியவில்லை. நாங்கள் ஒழியமாட்டோம். இந்த நாட்டிலே தமிழ் மக்கள் இருக்கும் வரையும் எங்களுடைய கொள்கை இந்த நாட்டிலே வெற்றி பெறும்வரையும் தமிழர் விடுதலைக் கூட்டணியை எவராலும் அசைக்க முடியாது. ஏனென்றால் நாங்கள் சுயநலன்களுக்காகப் போராடவில்லை. அல்லது நாங்கள் சிங்கள மக்களை அடக்கி, ஒடுக்கப் போராடவில்லை. நாங்கள் இழந்த உரிமைகளை — நாட்டைக் கேட்கிறோம். மனிதாபிமான உரிமைகளைத் தாருங்கள் என்றுதான் கேட்கிறோம்.

# 8 இருத்தல் தானியம் என்னாச்சு?

# ஏறுகிற வாழ்க்கைச் செலவுக்கு என்ன பதில்?

## யூ. என். பி. தேர்தல் விஞ்ஞாபனத்தைப் படித்துக் காட்டி இரா. சம்பந்தன் கேள்விக்குமேல் கேள்வி!



ஐக்கிய தேசியக் கட்சி 1977 பொதுத் தேர்தலின் போது வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து சில பகுதிகளை இங்கு வாசிக்க விரும்புகிறேன். அதிலே கூறியிருப்பது இது தான்—

''பட்டினி கிடப்போருக்குஉணவு—கடந்தஆறு ஆண்டுகால ஆட்சியில் முன் எப்போதுமில்லாத படி விலைவாசி உயர்வின் கொடுமையை நாம்அனுபவித்தோம். இக்காலகட்டத்தில் ரூபாவின் பெறுமதி குறைந்து குறைந்து கொண்டே வந்துள்ளது''

இன்று அதன் பெறுமதி மேலும் குறைந்து விட்டது. மேலும் வாசிக்கிறேன்—

''விலைவாசி உச்சநிலையடைந்ததன் காரணமாக எமதுகுடும்பங்களுக்குத் தேவையானபோஷாக்குஉணவுகளை வாங்கிக் கொடுக்கமுடியாமல்வேதனையும் தொல்லையும் அடைய நேரிட்டது''

விலைவாசிகளின் உயர்வு இன்று அதையும் விட உயர்ந்து விட்டது. மேலும் படிக்கிறேன்—

''அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும்எதேச்சாதிகாரமும் ஊழலும் மலிந்துவிட்டன. நாளாந்த வாழ்க்கை சகிக்கமுடியாத அளவுக்கு சிறிமா ஆட்சியின்கீழ் விலைவாசிகள் இமாலய உயரத்தை அடைந்து விட்டன. அவற்றைக் குறைப்பதற்கு ஐ.தே.க. முதலிடம் அளிக்கும்'?

1977ம் ஆண்டிலே வாழ்க்கைச் செலவு இமாலய உயரத்தை எட்டிப்பிடித்திருந்தது என்றால் 1977ம் ஆண்டு வாழ்க்கைச்சுமை தாங்க முடியாத அளவுக்கு இருந்ததென்றால்: இன்று 1979ம் ஆண்டு வாழ்க்கைச் செலவு எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்று கேட்கிறேன். எனது நல்லநண்பர் மானிப்பாய் எம்.பிகூறுகிறார் வாழ்க்கைச் செலவு ஸ்புட்னிக் உயரத்தில் செல்வதாக இந்நாட்டுமக்களுக்கு நாளாந்த வாழ்க்கை எந்த நிலைக்கு சகிக்க முடியாத அளவுக்கு இன்று வந்துவிட்டது? இந்த வரவு செலவுத்திட்டத்திலும் ஏழை மக்களுக்கு எந்த நிவாரணமும் அளிக்கப்படவில்லை,

யூ.என்.பியின் தேர்தல் விஞ்ஞாபனம் மேலும் கூறுகிறது—

''நாளாந்தவாழ்க்கைக்குத் தேவைப்படும் இறக்குமதிப் பொருட்களுக்கும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கும் செயற்கையாக அதிகரிக்கப்பட்டிருக்கும் விலைகளை குறைப்பதன் மூலமும், உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும், வாழ்க்கை செலவைக் குறைப்போம் நுகர்வோர் சுரண்டப்பட இடமளியோம்''

ஆரியரத்தினஜெயதிலக:- எச்சில் இலை நக்குவோர் இன்று கிடையாது.

சம்பந்தன்:— மேலும் உங்கள் விஞ்ஞாபனத்தைக் களுங்கள்—

''வளர்ந்தோர் ஒவ்வொருவருக்கும் கிழமைக்கு எட்டுஇருத்தல் தானியம் உட்பட மேலும் போஷாக்குள்ள உணவு கிடைப்பதற்கு நாம் வழி செய்வோம்''

இதுதான் 1977 பொதுத் தேர்தலின் யூ.என்.பி. முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனம். நான் கேட்கிறேன், வாழ்க்கைச் செலவைக் குறைத்தீர்களா? அல்லது மேலும் மக்களுக்கு எட்டாத சகிக்கமுடியாத அளவுக்கு உயர்த்தினீர்களா?

றெனிடீமெல்,— வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு உங்களால் திட்டம் தரமுடியுமா?

சம்பந்தன்; அது எனது வேலையல்ல— நீங்கள்தான் மக்களுக்கு அப்படிவாக் குறுதிகொடுத்தீர்கள்.

றெனிடீமெல்: தமிழீழம் உருவானால் தமிழ்ஈழத்தின் வாழ்க்கைச் செலவை எப்படிக் குறைப்பீர்கள்?

சம்பந்தன்; செல்வச் செழிப்புடன் விளங்கப் போகும் தமிழ்ஈழ அரசின் நிதி அமைச்சராக மன்னார் எம்.பியே விளங்குவார். அவருக்கு அதற்கு வழி தெரியும்.

றெனி: நான் அவரிடம் கேட்டுத்தெரிந்து கொள்வேன்.

சம்பந்தன்:— தமிழ் ஈழத்தில் அந்த நிலையை அடையும்வரை அந்த இரகசியத்தை அவர்வெளிடமாட்டார். முந்திய அரசின் காலத்தில் நிலவிய ஊழலைக் கடுமையாகக் கண்டித்தே இந்த அரசு பதவிக்கு வந்தது. திறமையும் துணிவும் மிக்க தலைமையையும் லஞ்சம், ஊழல் பக்கச்சார்பு-பாரபட்சம், அநீதி அற்ற நிர்வாகத்தையும் வழங்கப் போவதாக இந்த அரசுகூறியது. எல்லாமக்களுக்கும் சம வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இனம், மதம். மொழி, சாதி அல்லது அரசியல் நம்பிக்கை காரணமாக எவருக்கும் பாரபட்சம் காட்டமாட்டோம் என்று உறுதியளித்தீர்கள். இவை நீங்களேஉங்களுக்கு வகுத்துக் கொண்ட இலட்சியங்கள், ஆனால் இப்போதோ ''தார்மீகசுதந்திர சமுதாயம்'' என்ற வார்த்தையை நீங்கள் அடிக்கடி உபயோகிப்பதில்லை; அது வனாந்தரத்துக்கு சென்றுவிட்டது. பொது வாழ்வில் நேர்மையும் விசுவாசமுமின்றி இந்நாட்டில் அபிவிருத்தி வெற்றிபெறமாட்டாது:

சிங்கப்பூரைப்பற்றிப்பேசுகிறீர்கள்—சிங்கப்பூரின் அபிவிருத்தியின் அடித்தளம் பொது வாழ்வில் நேர்மை, சுத்தம், விசுவாசம் இவற்றினாலேயே அமைக்கப்பட்டது இங்கு அந்த நிலை இருக்கிறதா?

நல்லூர் பா-உ: பேசுகையில் அரசினால் வேலைவழங்கப்பட்ட 250.000 பேரில் 5000பேர்கூடதமிழர்இல்லையென்று சற்று மிகைப்படுத்திக் கூறிவிட்டார். என்னைப் பொறுத்தவரை 3000 தமிழர்களுக்குக்கூடவேலைவழங்கப்படவில்லையென்று கூறுவேன். அப்படிவேலைபெற்றவர்களில் பலரும் இலஞ்சம் கொடுத்தே அதைப்பெற்றார்கள்.

மூளைத்திறனும்ஆற்றலும் வேலைசெய்யும் திறமையும் கொண்ட தமிழ் இனம்ஒதுக்கப்பட்டது. அடுத்தடுத்து ஆட்சிக்குவந்த அரசுகள தமிழர்களுக்கு எதிராகக் கடைப்பிடித்துவரும் இம் மாதிரியான பாரபட்சக் கொள்கையே தமிழ் ஈழக் கோரிக்கைக்கு உந்துசக்தியாக விளங்குகிறது,

250,000 வேலைகள் வழங்கப்பட்டதில்,5000க்குகுறைவாகவே தமிழர்களுக்குவேலைவழங்கியுள்ளீர்கள் என்று உங்கள்மீது நான் குற்றம் சுமத்துகிறேன்; இக்குற்றச்சாட்டுக்கு நீங்கள்பதிலளிக்க முடியாது. இந்த5000க்கு உட்பட்ட தொகையில்கூட கணிசமான தொகையினர் இலஞ்சத்தின் அடிப்படையிலேயே வேலை பெற்றனர்!

இப்படிச் செய்து கொண்டே எல்லோரையும், சமத்துவமாகவும் நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதாகக் கூறிக்கொள்கிறீர்கள். தார்மீக சமுதாயம் பற்றிக் கதையளக்கும் இந்த அரசினால், எமது குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க முடியவில்லை. நண்பர் ஒருவர் கூறுகிறார் மன்னிக்கும் படி; மன்னிப்பு இருக்கட்டும்—250,000 வேலைகளில் 5000 கூட தமிழருக்கு இல்லை. மன்னிக்கட்டுமாம்! வெட்கம்! அவமானம்!!

திருகோணமலையில் உருவாகும் பிரிமா மா ஆலை பற்றி நிதியமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் அந்த மா ஆலையில் திருகோணமலையிலிருந்து தமிழ் இளைஞர்கள் வேலைபெறமுடியவில்லை. அங்கே வேலைக்கு ஆட்களை எடுப்பதில் மிகவும் மோசமான பாரபட்சம் கடைப்பிடிக்கப்படுகிறது, இதிலே முதலீடுசெய்பவர்கள் தமிழ் இளைஞர்களின் ஆற்றலை அங்கீகரித்தாலும் அவர்களுக்கு நெருக்கடி கொடுக்கப்படுகிறது. அதனால், திருகோணமலையிலுள்ள தமிழ் இளைஞனை ஒதுக்கிவிட்டு மாத்தறையிலிருந்தும், களுத்துறையிலிருந்தும் வருவோருக்கே முதலிடம் தரப்படுகிறது.

இதைத்தான் நீங்கள் எங்களுக்கு செய்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் நடவடிக்கைகள்தாம் மீள் பரிசிலனைக்கு இடமில்லாத வகையில் இந்நாட்டில் தமிழ்த் தேசியத்தை வேகப்படுத்துகிறது. வேறு வழியின்றேல், நாம் எமது பாதையிலேயே செல்வோம். எம்மை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. (பாராளுமன்றத்தில் 21-11-79ல் பேசியது)

## வரலாற்று அடிப்..

—7-ம் பக்கத் தொடர்

அதி தீவிர தேசிய வாதிகள் என்பேன். என்ன விலை கொடுத்தும் இறைமையுள்ள தனிநாடு ஒன்றை அமைத்தே தீரவேண்டும் என்பது இவர்களது தணியாத ஆசை. விடுதலை என்ற குறிக்கோளை அடையவேண்டும் என்பதில் மிக உறுதியாக, ஒருமைப் பாட்டுடன் இணைந்து நிற்கும் இத்தகைய விடுதலை வீரர்களை நான் உலகில் வேறெங்கும் கண்டதில்லை.

### வெளிநாட்டு அக்கறை

மூன்றாவதாக, பெரும் வல்லரசுகள்,குறிப்பாகச்சொன்னால், பெரும்பாலான வெளிநாட்டு அரசுகள் இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் நடப்பவற்றில் ஆர்வம் காட்டுகின்றன என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. (அமெரிக்க) ஐக்கிய நாடுகள்,சோவியத்து ஒன்றியம், சீன மக்கள் குடியரசு, இந்திய அரசு, பிரித்தானிய ஐக்கிய அரசு, வட அயர்லாந்து ஈழத்தின் நிகழ்வு மாற்றங்களைக் கூர்ந்து நோக்கிவருகின்றனர் என்பதைப் பார்க்க மறுப்பவர்களைத்தவிர்ந்த அனைவரும் உணர்வர் என்பதும் உறுதி. பேரரசுகளின் இந்த ஆர்வத்தின் விளைவு எதுவாகும் என்பதை உய்த்துணரும் பொறுப்பை உங்களுக்கே விட்டுவிடுகிறேன்.

### அரசியல் சுதந்திரமே முதலில்

எமது அரசியல், பொருளாதாரத் தேவைகள் எவை என்பதுபற்றி நான் மேலோட்டமாக உங்களுக்குக்கூறியுள்ளேன். ''நீங்கள் முதலில் அரசியற்சுதந்திரத்தை நாடிப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனைய அனைத்தும் உங்களை நாடிவந்துசேரும்'' என நிக்குருமா (Nkrumah) முன்பொருமுறைகூறினார்: உதிக்கப் போகும் அரசு ஒன்றின் பொருளாதாரத் திட்டத்தையும் வழிமுறைகளையும் வரைந்தளிக்கும்படி ஒரு தேசிய (விடுதலை) இயக்கத்திடம் எதிர்பார்க்கக் கூடாது. அரசியற்போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ள அவர்களிடம் ஓய்வு கிடையாது.

இந்திய தேசிய காங்கிரசின் அநுபவத்திலிருந்து நாம் படிக்கவேண்டிய பாடம் உள்ளது. எல்லா வகையிலும் ஒன்றுபட்டு நிற்கும் மக்களைப் பொருளாதாரப் பிரச்சினை மூலம் பிளவுபடுத்துவது புத்திசாலித்தன மற்றதென்றும், அரசியல் நெறிக்கு மாறானது என்றும் இந்திய தேசிய காங்கிரசு தனது ஆரம்ப காலத்திலேயே உணர்ந்து கொண்டது. பொருளாதார அபிவிருத்தி அடிப்படையானது என்பதில் ஐயம் இல்லை. ஆனால், நான் முன்பு குறிப்பிட்டதுபோல அது பிரிக்க முடியாத அளவுக்கு யாப்பியல், அரசியற் சீர்திருத்தங்களுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

— அடுத்த இதழில் முடியும்





''மில்க் வைற்'' விற்பனையாளருக்கு விசேட பரிசு!

மில்க்வைற் 72சோப்சுற்றி வரும் உறைகள் 50 அல்லது 12 பார் சோப் சுற்றிவரும் உறைகள் 50 அல்லது மில்க் வைற் அரைக்கட்டி பைகற் உறைகள் 50 கொடுத்து அழகிய துவாய் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் த. பெ, எண். 77, யாழ்ப்பாணம்.

# “பழைய தமிழ்த் தலைமுறை ஏமாற்றப்பட்டது! புதிய தலைமுறை நிச்சயம் ஏமாறுது!

## உதட்டளவில் ஒற்றுமை பேசுவதால் உலகத்தை ஏமாற்ற முடியாது!

### பாராளுமன்றத்தில் யாழ் எம். பி. யோகேஸ் முழக்கம்!

காலஞ்சென்ற திருச்செல்வம் அவர்கள்அரசாங்கத்தில் ஓர் உறுப்பினராக இருந்த காலத்தைப் பற்றி இங்கு பேசிய கொழும்பு மாவட்ட அமைச்சர் தனது பேச்சிலே குறிப்பிட்டிருந்தார். தமிழர்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் கிடைத்த தலைவிதியின் தண்டனையை துரதிருஷ்டவசமாக அவர்களே அனுபவிக்க நேரிட்டது. அவர்கள் எப்பொழுதும் ஏமாற்றப்பட்டவர்களாகவே இருந்தனர். சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் காலத்திலிருந்து தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டே வந்திருக்கின்றனர். அவர்கள் இறக்கும்போது விரக்தியுடனேயே இறந்தனர்.

நீங்கள் சேர் பொன்னம்பலம் இராமநாதனைப்பற்றி எப்பொழுதும் உயர்வாகவே பேசிக் கொள்ளுகிறீர்கள். அவரது வாழ்வின் பிற்பகுதியில் அவர் எவ்வளவு தூரம் கசப்பு அடைந்திருந்தாரென்பதை அறிவதற்குஅவரது உண்மையான வாழ்க்கை வரலாற்றை நீங்கள் படிக்க வேண்டும். அவர் இறக்கும்போது விரக்தியடைந்தே இறந்தார்.

டட்லி— செல்வநாயகம் ஒப்பந்தத்தின்படி. அமரர் திருச்செல்வம், காலஞ்சென்ற டட்லிசேனநாயகா அரசின் கீழ் உள்ளூராட்சி அமைச்சர் பதவியை ஏற்றார். அந்த ஒப்பந்தத்துக்கு என்ன நடந்தது? பண்டா— செல்வா ஒ'பந்தத்துக்கு என்ன நடந்ததோ அதுவே இதற்கும் நடந்தது. இந்த ஒப்பந்தங்கள் யாவும் கிழித்து எறியப்பட்டன. தமிழர்கள்பெறுமதியற்றவர்களாக்கப்பட்டனர்,

எனவே, கௌரவ கொழும்பு மாவட்ட அமைச்சர் இங்கு வந்து ஒற்றுமைக்கும் ஒத்துழைப்புக்கும் எம்மை அழைப்பதற்கு முன்பு, தமிழர்கள் எப்படி நடுத்தெருவில்—வனாந்தரத்தில்—அநாதைகளாகக் கைவிடப்பட்டார்கள் என்றவரலாற்றை அவர் மனதிலே பதித்துக் கொள்ள வேண்டும்— தமிழர்கள் செய்துகொண்ட ஒவ்வோர் ஒப்பந்தமும் தூக்கி வீசப்பட்டன.

உங்களுக்குத் தேவை ஏற்படும்போது தமிழர்களுடன் ஒப்பந்தம் எழுதுகிறீர்கள்; தேவை முடிந்தபின் தூக்கியெறிகிறீர்கள், சுளை உறிஞ்சப்பட்ட தோடம்பழத் தோலாக தமிழர்களை வீசுகிறீர்கள்; இது பழைய தலைமுறையில் இடம்பெற்றது.

ஆனால் இந்தத் தமிழ்த் தலைமுறை மிகவும் விழிப்பாக செயற்படுகிறது. ஒற்றுமை பற்றி மாவட்ட அமைச்சர் பேசியபோது, அவருக்குப் பதிலளிப்பதற்கு பலமுறை யோசித்தே பதிலளிக்கிறேன். தமிழர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்ற வரலாறு இது.

லண்டன்லெயாட்ஸ்வங்கி (LONDONLLOYDS BANK) இலங்கையைப்பற்றி 1978ல் தயாரித்து வெளியிட்டுள்ள பொருளாதார அறிக்கையிலிருந்து சில வரிகளை இங்கு வாசிக்க விரும்புகிறேன்.

“Clashes between the minority Tamils andSinhalese majority remains a serious aggravation. The Tamil minority stand for a Separate State based on allegations of discrimination by successive Governments.”

“சிங்களப் பெரும்பான்மையினருக்கும், தமிழ்ச் சிறுபான்மையினருக்குமிடையேயுள்ளமோதல்கள் இன்னும் பாரதூரமான பதட்ட நிலையிலேயே இருக்கின்றன. அடுத்தடுத்து வந்த அரசுகள் பின்பற்றி வந்த பாரபட்சங்களின் அடிப்படையில் தமிழ்ச் சிறுபான்மையினர் தனிநாடு கோரி நிற்கின்றனர்”

என்று அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இது நாம் வெளியிட்ட அறிக்கையல்ல. லண்டன் வங்கியின் அறிக்கை. நீங்கள் இங்கே வந்து தர்மிஷ்ட சமுதாயம் பற்றிபேசுகிறீர்கள். நாமோ ஒவ்வொருமாதமும் இராணுவ அட்டூழியம்பற்றிப் பேசவேண்டியுள்ளது, இங்கு தவிர நாம் வேறு எங்கு தான் பேசமுடியும்?

முதுகில் சுடப்பட்ட ஓர் இளைஞனின் நலன்களைக்கவனிப்பதற்காக நான் சென்றிருந்தேன் இராணுவத்தினர் பலதடவைகளில் என்னை எனது ஜீப்புக்குள் ஏறுமாறு கோரினர். உங்களுக்கு அப்படி அவர்கள் கூறுவார்களா? அவர்கள் அதற்கு துணியமாட்டார்கள். நான் ஆளப்படும்இனத்தைச் சேர்ந்தவன் என்பதால் எனக்கு அவ்விதம் கூறத் துணிகிறார்கள்.

அவசரகாலச்சட்டம் விவாதிக்கப்பட்ட போது இராணுவ அத்துமீறல் நடவடிக்கைகளையிட்டுஇச்சபையிலே முறையிட்டோம். இச்சபையிலேயன்றி எங்குநாம் இதைக்கூற முடியும். வல்வெட்டித்துறையில் சிகை அலங்கார சமூகத்தைச்சேர்ந்த அப்பாவி இளைஞன் ஒருவன் முதுகிலே சுடப்பட்டான். அதுபற்றிநாம்எங்கே புகார் செய்யமுடியும்? எமது சொந்தப் பிரதேசங்களிலேயே எமக்குள்ள பேச்சுரிமையை நீங்கள் பறித்து விட்டீர்கள், நாம் பொதுக் கூட்டங்களை நடத்த முடியாது! பத்திரிகைகளில்நாம் விரும்புவதை எழுதவும் வெளியிடவும் முடியாது. எனவே இச்சபை மூலமே எமது பகுதியில் நடைபெறுவனவற்றை தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் நாம் கூறமுடியும். இதிலே என்னபிழை?

இந்தநிலை எப்படி ஏற்பட்டது? இப்பிரச்சினை எப்படித் தோன்றியது? தமிழ் மக்கள் தனிநாடு கோர வேண்டிய காரணிகள் யாவை என்பதையிட்டு அரசின் உயர்பதவியில் உள்ளவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். 1930களில்தமிழ் மக்கள் உங்களுடன் ஒன்றுபட்டு சுதந்திரத்துக்காகப் போராடினார்கள். அப்படிப்பட்ட தமிழர்கள் தமது சுதந்திரத்துக்காக இன்று போராட வேண்டிய நிலை எப்படி ஏற்பட்டது?

பொலீஸ், இராணுவம், கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றை எடுத்துப்பாருங்கள், இவற்றுக்குஎத்தனை தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்? தமிழர்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை— அதனால் தமிழர்களை நீங்கள் தெரிவுசெய்வதில்லை. அதைஎன்னால்விளங்கிக் கொள்ள முடிகிறது,



இன்றையசூழ்நிலையில் நீங்கள் தமிழர்களை நியமிக்கவும் முடியாது. நீங்கள் நியமிப்பதும் இல்லை.

எத்தனை பொலிசாரை நீங்கள் சப் இன்ஸ்பெக்டர்களாக நியமித்திருக்கிறீர்கள்? ஒருவர்கூட இல்லை! இன்றைய சூழ்நிலையில் நாம் தனிநாட்டுக்காகப் போராடும்போது, உங்களால் அவ்விதம் செய்யமுடியாது. அது எனக்குப்புரிகிறது, ஆனால் தயவு செய்து ஒற்றுமை பற்றிமட்டும் பேசாதீர்கள். முதலைக் கண்ணீர் வடிக்காதீர்கள். உண்மையைப் பேசுங்கள்;

தமிழர்களை நீங்கள் நம்பவில்லையென்பதை வெளிப்படையாகக் கூறுங்கள். அதனால் தமிழர்களை ஆயுதப்படைகளுக்குத் தெரிவு செய்யவில்லையென்று கூறுங்கள். தமிழர்கள் பல்கலைக்கழகங்களில் படிப்பதை நாம் விரும்பவில்லை; அதனால் அவர்களை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யவில்லையென்று கூறிவிடுங்கள். இதை நீங்கள் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் கூறுங்கள். எதிர்காலச் சந்ததிக்காக இதை நீங்கள் செய்யவேண்டும்.

நாம் ஏதோ ஒழித்து விளையாடிக்கொண்டு — கண்ணுமூச்சி காட்டிக்கொண்டு— “நாமெல்லாம் ஒன்று; நாம் எலலாம் ஒன்றுபட்டுள்ளோம்” என்று போலித்தனமான பல்லவி பாடாமல் இருப்போமாக. அது உண்மையிலிருந்து மாறுபட்டது, நீங்கள் எம்மை நம்புவது இல்லை, அதனால்தான், ஆயுதப்படைகளுக்கு தமிழர்களை நீங்கள் தெரிவு செய்வதில்லை.

இன்றைய சூழ்நிலையில் நீங்கள் தமிழர்களை நம்ப முடியாதுதான். ஆனால் அதை வெளிப்படையாக கூறிவிடுங்கள். உருத்திராட்சப் பூனைபோல இருந்துகொண்டு “நாமெல்லாம் ஒன்று; நாமெல்லாம் சகோதரர்கள்” என்று இச்சபையிலே போலி உபதேசம் செய்யாதீர்கள்,

அப்படிக் கூறுவது தவறானது. நீங்கள் யதார்த்தத்தை அச்சமின்றித் தரிசியுங்கள். உண்மைகளைப் பேசுங்கள். பிரச்சினைகளை நேரடியாகச் சந்திக்கும் துணிவு பெறுங்கள்; போர்வைக்குள் மறைந்துகொண்டு ஒற்றுமைப் பேச்சுப் பேசாதீர்கள்.

டாக்டர் ரஞ்சித் அத்தபத்து: எத்தனை தமிழ்உதவி பொலீஸ் மா அதிபர்கள் இருக்கிறார்கள்?

யோகேஸ்வரன்: நான்கு சிரேட்ட உதவித் தமிழ் பொலீஸ் மா அதிபர்கள் இருக்கும்போது அரசாங்கம் யாரை பொலீஸ் மா அதிபராக நியமித்தது?

அத்தபத்து: இந்த அரசாங்கம் நியமித்த உதவி பொலீஸ் மா அதிபர்களில் தமிழர்கள் எத்தனைபேர்?

அமிர்தலிங்கம்: அவர்கள் ஏற்கெனவே அப்பதவிகளில் இருந்தவர்கள்.

அத்தபத்து: அவர்கள் பதவி உயர்வு பெற்றார்கள்.

அமிர்: ஏற்கெனவே சிரேட்ட பொலீஸ் சுப்ரீண்டெண்டாக இருப்பவர்களையே நீங்கள் பதவி உயர்த்தலாம்-புதிதாக நியமனம் எதுவும் நீங்கள் கொடுப்பதில்லை.

அத்தபத்து: அவர்களில் நம்பிக்கை இல்லாவிடின் பதவி உயர்வு வழங்கியிருக்க மாட்டோம்.

யோகேஸ்: சிரேட்ட உதவி பொலீஸ் மா அதிபரை பொலீஸ் மா அதிபர் பதவிக்கு நீங்கள் பதவி உயர்த்துவதில்லை,

அத்தபத்து: யாழ்ப்பாணத்துக்கும் உதவி பொலீஸ் மா அதிபர் ஒருவரை (தமிழரை) நாம் அனுப்பியுள்ளோம்;

அமிர்தலிங்கம்: பிரிகேடியரின் கீழ்!

அத்தபத்து: பிரிகேடியர் நிரந்தரமாக அங்கு இருக்கப் போகிறவரல்ல.

யோகேஸ்: வடபகுதியில் அவர் இப்போது நிரந்தரமாகி விட்டார்.

அத்தபத்து: அப்படி உலகத்துக்கு காட்டி ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறீர்கள்,

யோகேஸ்: உலகம் உண்மையை அறிய வேண்டும். பொலீஸ் மா அதிபர் நியமனம் நடைபெற்றபோது, சிரேட்ட பொலீஸ் மா அதிபர்களாக நான்கு தமிழர்கள் இருந்தும் அவர்களை அலட்சியப்படுத்திவிட்டு ஒரு சிங்களவரை அப்பதவிக்கு நியமித்தீர்கள். நான் எப்பொழுதும் ஒளிவு மறைவின்றியே பேசுபவன். இன்று உங்களுக்குத் தேவைப்படுவது இதயமாற்று சத்திர சிகிச்சையே. இரக்கமுள்ள இதயம் பொருத்தப்பட வேண்டும்.

இன்று வடபகுதிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் அரசாங்க நிர்வாகிகள் நிர்வாக சேவையிலிருந்தா நியமிக்கப்பட்டுள்ளனர்? இன்று வடக்கே நியமிக்கப்பட்டிருக்கும் அரசாங்க நிர்வாகிக்கு எந்த ஒரு அனுபவமும் கிடையாது.

நாம் இந்தச் சபைக்கு ஒரு திட்டவட்டமான ஆணையுடன் வந்திருக்கிறோம். எமது மக்கள் அபிவிருத்திக்காகவே வாக்களித்திருப்பதாக கொழும்பு மாவட்டஅமைச்சர் கூறினார். அப்படி அவர்கள் வாக்களிக்கவில்லை. நாம் முன் வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலேயே அவர்கள் எமக்கு வாக்களித்தனர். அந்த ஆணையின் அடிப்படையிலேயே நான் இந்தச் சபையில் இருக்கிறேன். அப்படியல்ல என்று நான் விசுவாசமாக உணர்வேனாகில், நான் சபையிலிருந்து வெளியேறிவிடுவேன். எமது மக்களின் கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் புரிந்து கொள்ளும் இதயமாற்றமே இன்றைய தேவையாகும்.

(19-11-79ல் பாராளுமன்றத்தில் பேசியது)

யாழ் மாவட்டத்தில்
செய்தித் தணிக்கை
அவசரகாலச்சட்டம்
**இன்றுடன்**
**139-வது நாள்**

# வரலாற்று அடிப்படையிலிருந்து வளர்ச்சி பெற்றுள்ள தமிழ் தேசியத்தை இனி யாராலும் அழித்துவிட முடியாது

இடதுசாரிச் சிங்கள அரசியல்வாதிகளும் மேலே காட்டிய நெறியிலிருந்து விலகிவிடவில்லை. 1948-49 இல் இடதுசாரிகளே இந்தியத் தமிழர் உரிமைகளின் தீவிர பாதுகாவலர்களாக விளங்கினர். 1964—65 இலும், 1970—77 இலும் இலங்கையிலுள்ள இந்தியத் தமிழரில் அரைப்பங்கினரை நாடுகடத்தும் சிறிமா - சாத்திரி ஒப்பந்தத்தின் தீவிர ஆதரவாளர்களாக இடதுசாரித்தலைவர்கள் முன்னணியில் நின்றனர். 1956 இல் இலங்கைச் சமசமாசக் கட்சியினர் தமிழ் மொழிக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் மிக உறுதியாக நின்றனர். 1964-இல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்தபோது அவர்கள் சம அந்தஸ்துக் கொள்கையைக் கைவிட்டனர். 1970 இல் இலங்கைச் சமசமாசக் கட்சியும் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பொதுவேலைத் திட்டமொன்றை உருவாக்கியபோது இரு மொழிகளுக்கும் ஒத்த உரிமை என்ற கொள்கையைக் கைவிட்டனர். 1970 முதல் 75 வரை சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அரசமைத்த சமசமாசக்கட்சியோ 1970 முதல் 77வரை அவர்களோடு கூட்டணியமைத்த கொம்யூனிஸ்ட் கட்சியோ தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அணுவளவும் முயலவில்லை.

## பழையநிலை இனி சாத்தியமில்லை

இடதுசாரிகள் தமிழர் உரிமைகளை வழங்கும் விருப்பமின்றி, இணக்கமின்றி இருந்ததோடு தமிழ் யுற்ற நிலையில் உள்ளனர். இன்று அவர்களிடையே தோன்றியுள்ள (தமிழ்) நாட்டின வாதம் என்றும் கட்டுப்படுத்த முடியாததாகும். இதற்கான பொறுப்புப் பெரும்பாலும் சிங்கள அரசியல் தலைமைப் பீடத்தையே சாரும். எனது மாமனாரும் தமிழ்த் தேசியத்தின் தந்தையும் தமிழ் நாட்டினம் என்ற கருத்தை உருவாக்கியவருமான எஸ் ஜே. வி. செல்வநாயகம், 1958 மே மாதத்தில் நிகழ்ந்த சிங்கள—தமிழ் வகுப்புக் கலவரத்தின் பின் தமிழர்களாகிய எம்மை ஆட்சிபுரியும் அளவுக்குச் சிங்கள இனம் யும் பேணப்பட்டதோடு அவ்வரசின் ஆதாரமாகவும் அமைந்தன. 1505-க்கும் 1948 க்கும் இடைப்பட்ட காலத்து மேல் நாட்டார் ஆட்சியில் நாட்டில் பலமாற்றம் நிகழ்ந்தாலும் (தமிழ்—சிங்கள உறவில்) எவ்வித மாற்றமும் நிகழவில்லை என்பதையே இங்கு நான் குறிப்பிட விழைகிறேன்.

(1948-க்குப் பின்னுள்ள) குறுகியகாலத்தில் அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூற்றிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சிங்கள—தமிழர் கூட்டுறவின் பொற் களுக்கெதிராக நடைமுறைபடுத்தப்பட்ட முரட்டுத்தனமும் ஆர்ப்பரிப்பும் நிறைந்த இன ஒதுக்கலின் விளைவுகளை மறக்கச் செய்யவோ, தமிழர் மத்தியில் நிரந்தரமாக நிலைகொண்டிருக்கும் சிங்களப் படையின் அநீதிகளைக் கண்டும் காணாதவர்கள் போல இருக்கச் செய்யவோ உதவப் போவதில்லை. இத்தீமைகள் அனைத்தையும் அகற்றி விட்டாலும் கூடத்தமிழ் தேசிய எழுச்சி தணிந்துவிடும் என எதிர்பார்ப்பது சந்தேகமே.

இன்று சனாதிபதியால்

---

பாலான தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகளை முன்வைக்கும் விருப்பமும் சம்மதமும் உள்ளதாக வேண்டும்.

## ஒரு நாடு சாத்தியமா?

தமிழ்மாவட்டங்கள் தாம் விரும்பியவகையில் அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவதோடு வேண்டிய நிதி, பொருளாதார ஆகரவும் வழங்கப்பட வேண்டும். இந்த வழி தேர்ந்தெடுக்கப்பட்டால், தமிழரின் பொரு

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகள் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துமா?

பெருமைமிக்கது அல்ல என்பதே தமது உறுதியான முடிவு என்று என்னிடம் கூறினார். அன்றிலிருந்து இன்றுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மதிப்படும்போது அது முழுவதும் உண்மையே என்பது புலனாகிறது. இரு இனங்களும் ஒன்றாக இருந்து போரிடும்நிலையையே இன்று நாம் காணுகிறோம்;

## தமிழரசு பயமுறுத்தவில்லை

1505 - இல் போர்த்துக்கேயர் இலங்கை வருமுன் இந்த நாட்டில் நிலவிய நிலையே இன்று இங்கு ஏற்பட்டுள்ளது. 1618 - ஆம் ஆண்டுவரை வடக்கில் ஒரு தமிழரசு செழிப்புற்றிருந்தது. அவ்வரசு கண்டியில் நிலைபெற்றிருந்த சிங்கள காலத்தை நாம் அநுபவித்தோம். அந்தப் பொற்காலம் மீண்டும் வரப்போவதில்லை. 1505 ஆம் ஆண்டுக்கு முந்திய காலகட்டத்திற்கு நாம் மீண்டும்சென்று விட்டோம். பல நூற்றாண்டு காலம் அரண்செய்யப்பட்டு நிலவிய ஒன்றைச் சில ஆண்டுகாலம் அமைந்த சிங்கள — தமிழ் மேலவர் குழாமின் கூட்டுறவால் அழித்து விட முடியாது. அது உண்மையில் சிங்களவர்—தமிழர் கூட்டுறவு அல்ல; அது ஆங்கிலம்பேசும் சுதேசிகளின் கூட்டுறவே.

## இணையும் சாத்தியமில்லை

நான் விடைகாண முயலும் முக்கிய வினாவுக்கே இவை எம்மை இட்டுச் செல்கின்றன. எமது அரசியல் முன்வைக்கப்பட்டிருப்பது போன்ற தீர்வுகள் முயற்சிக்கப்படலாம். ஆனால், அவை மூன்று நிபந்தனைகளுக்கு அமைவாக இருந்தால் மட்டுமே வெற்றி பெறமுடியும்; முதலாவதாகத் தமிழ்த் தலைமைப்பீடம் முன்வைத்துள்ள இறைமையுள்ள தமிழீழக் கோரிக்கைக்குப் பொருத்தமான மாற்றுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். இரண்டாவதாக தமிழீழம் என்ற ஆணையைத் தமது தலைவர்களுக்கு வழங்கிய மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகத் தீர்வு அமையவேண்டும். முன்வைக்கப்படும் தீர்வு மக்களைத் திருப்தி செய்யத் தவறினால் இன்றைய பாராளுமன்றத் தலைமைப்பீடம் முற்றாக அகற்றப்பட்டு, 'செய் அல்லது செத்துமடி' என்று கூறும் தீவிரவாதத் தலைமை பொறுப்பேற்கும்! இதன் விளைவு ஏழு சிங்கள மாநிலங்களிலுமுள்ள எல்லாத் தமிழர்களையும் இழப்பதாக அமையும். மூன்றாவதாக, சிங்கள அரசியல் தலைமைப்பீடம் பெரும்

ளாதாரத் தேவைகள் நிறைவு செய்யப்படலாம்; வேலைவாய்ப்பற்ற தமிழருக்குத்தொழில் கிடைக்கலாம்: தமிழர்பண்பாடு பாதுகாக்கப்படலாம். எல்லாவற்றுக்கும் மேலாகத் தேசியவாதம் ஒரு நாடு என்ற அமைப்புக்குள் நிறைவு செய்யப்படலாம். அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொள்ளப்படும் தவறான நடவடிக்கைகள் இந்தச் செயற்பாட்டைப்பயனற்றதாக்கிவிடும்

## அதி தீவிரவாதிகள்

தமிழ் நாட்டினவாதத்தையும் இறைமையுள்ள நாடு ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற தமிழர் அவாவினையும் மூன்று காரணிகள் மூண்டெரியச் செய்யலாம், முதலாவது, ஆர்ப்பாட்ட (செய்துகாட்டல்) விளைவு. வங்காளதேசம், சைப்பிரசு. கியூபெக் முதலிய இடங்களில நிகழ்ந்தவை இதற்கு உதாரணமாகும். குட்டி நாடுகள் மலிந்த உலகிலே நாம் வாழ்கிறோம். தமிழ்ஈழம் அதற்கு விதிவிலக்காக முடியாது.

இரண்டாவதாக. தமிழ்த் தேசிய இயக்கத்தில் தமது கொள்கைகளைத் திட்டமாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கும், ஒரு பிரிவினர் உள்ளனர். இவர்களை நான்

—6-ம் பக்கம் பார்க்க

## பிழை திருத்தம்

கடந்தவாரம் வெளியான கலாநிதி வில்சனின் கட்டுரையில் 6 ஆம் பக்கம் 1 ஆம் நிரலில்: இராமநாதனின் மகனான என்பதை அருணாசலத்தின் மகனான எனத் திருத்துமாறு வேண்டுகிறோம்;

# யாழ் மத்திய கல்லூரி விழாவில்

# பேராசிரியர் வில்சன் பேருரை (2)

மாநிலங்களில் சிங்களப் படை நிலைகொண்டிருந்ததை ஆதரித்ததும் சுதந்திர இறைமைத் தமிழீழக் கோரிக்கையை தமிழர் முன்வைக்க முக்கியமான காரணமாக—ஊக்கியாக— அமைந்தன. தமிழ்ப் பிரிவினை வாத சக்திகளும் தமிழ் நாட்டின வாத சக்திகளும் இன்று தடைசெய்ய முடியாத அளவுக்குத் தலையெடுத்துள்ளன; மீண்டும் பழைய நிலை வருதல் என்றுமே சாத்தியம் இல்லை;

## தமிழ் தேசியத்தின் வளர்ச்சி

இன்றைய நிலை என்ன? இலங்கைத் தமிழர் இன்று முழுமையாகத் தனிமை பௌத்த அரசுக்குப் பயமுறுத்தல் விடுக்கவில்லை. காலத்துக்குக்காலம் இங்கு வந்த திராவிடக் கூட்டத்தினரின் துணையோடு தமிழ் அரசு கண்டி அரசைப் புறங்கண்டு தன் ஆதிக்கத்தைச் செலுத்தியிருக்க முடியும். 1505 இல் மேலை நாட்டார் வருகைக்குப் பின்னர்கூட அத்தகைய நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை.

சிங்கள சமூகவியலாளரான எச். எல் செனிவிரத்தின கண்டி அரசின் சடங்குகள் என்ற தமது நூலிற் குறிப்பிட்டுள்ளதுபோலக் கண்டி அரசில் சிங்கள பௌத்தமும் சிங்கள மொழியும் சிங்களப் பண்பாடும் பாதுகாக்கப்பட்டு அவற்றின் தூய்மை நாட்டங்கள் எவ்வகையில் சிறப்பாக நிறைவு செய்யப்படலாம்? இங்கு நாம் தமிழ் சிங்கள தேசிய வாதம் உருவாகி நிலைத்துள்ளது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். இரண்டு இனங்களும் ஒன்றுவதினைவது சாத்தியமாகத்தோன்றவில்லை. பொருளாதாரத் தீர்வுகள் தீவிரக் கருத்துவேற்றுமைகளின் (Tension) வேகத்தைத் தணிக்க உதவலாம். ஆனால், இத்தீர்வு 1956. 1958, 1961, 1977 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக் கலவரங்களால் விளைந்த புண்ணை எளிதாக ஆற்றிவிடவோ அல்லது சிங்களம் மட்டும் நடைமுறைக்கு வந்த 1956க்குப் பிந்திய ஆண்டுகளில் தமிழ் மக்

## ஈரானின் செயலுக்கு பௌத்த காங்கிரஸ் கண்டனம்

ஈரானில் அமெரிக்கத் தூதராலயத்தின் அதிகாரிகள் பணயக் கைதிகளாக்கப் பட்டுள்ளதைஅகிலஇலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் சேர். சேனரத், குணவர்த்தனு கடுமையாகக்கண்டித்துள்ளார். பாதுகாப்பற்ற நிலையில் சகிக்க முடியாத சூழ்நிலையில் பயமுறுத்தல், மரணபீதி இவற்றுக்கு மத்தியில் பணயக்கைதிகள் வைக்கப்பட்டிருப்பது பாரதூரமான மனிதஉரிமைமீறலாகும், இதை அனுமதிக்க முடியாது. பணயக்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று திரு. குணவர்த்தனு கூறியுள்ளார், இதே போல் ஈழத்தில் நடைபெறும் மனித உரிமைமீறல்களையும் திரு. குணவர்த்தனு கண்டிப்பாரா;

## ஜனாதிபதி ஆணை..

—1-ம் பக்கத் தொடர்

கூடியதும் உருப்படியானதுமான தெளிவான மாற்றுத் திட்டம் ஒன்று தமிழ்த் தலைவர்களுக்குத் தரப்படவேண்டும்.

இரண்டாவதாக — தமிழ் ஈழம் என்ற ஆணையை தமிழ்த் தலைவர்களுக்குக் கையளித்துள்ள தமிழ் மக்களுக்கு அத்தீர்வு ஏற்புடையது என்று நிருபிக்கப்பட வேண்டும்.

அது தோல்வியுறும் பட்சத்தில், தற்போதைய பாராளுமன்றத் தலைமை அரசியற் புயலில்சிக்கி சுக்கு நூருகியுடைய, காரியத்திலேயே கண்ணுக இருக்கும் தீவிரவாதத் தலைமை உருவெடுக்கும்.

மூன்ருவதாக — பெரும்பான்மையான தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப் படக்கூடியதும் பயனளிக்கக் கூடியதுமான ஏற்பாடுகளை உருவாக்குவதில் சிங்கள அரசியல் தலைமை தனது அந்தரங்கபூர்வமான ஆசையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்த வேண்டும்''

## ஸ்ரீலங்கா பாரா..

—1-ம் பக்கத் தொடர்

அரசுப்பேரவை உறுப்பினர்களாக இருப்பதனுல் அவர்களுக்குஎவ்வளவு அலவன்ஸ் கிடைக்கும் என்று கேட்கிறேன்.

எம். சிவா: நாம் அலவன்சுக்கு மட்டும் வேலை செய்வதில்லை.

— பாராளுமன்றத்தில் (20-11-79)

## ஒருவரைப் பிடிக்க 1000 கலன் எண்ணெய்விரயம்

நான் அறிந்தவரையில் கிளிநொச்சித் தொகுதியில் இரண்டுபேரைப் பிடிப்பதற்கு எத்தனையோ ஜீப்புக்களும் டிறக்குகளும் நூற்றுக்கணக்கான மைல்கள் ஓடி இருக்கின்றன. போதாக்குறைக்கு ஹெலிகாப்டரும் அங்கு சென்றிருக்கிறது. ஒருவரைப்பிடிக்க ஏறக்குறைய 1000 கலன் எண்ணெய் எரிக்கப்பட்டிருக்கிறது.

—பண்டிதர் இரத்தினம் (பாராளுமன்றத்தில்)

## கொழும்பில் திருச் செல்வம் நினைவுகூட்டம்

அமரர் திருச்செல்வம் அவர்களின் அஞ்சலிக் கூட்டம் ஒன்று திருச்செல்வம் பொதுப்பணி மன்றத்தின் சார்பில் 1.12.79 மாலை கொழும்பு ஸ்ரீநாராயண குரு மண்டபத்தில் திரு; எம், துரைராசா தலைமையில் நடைபெறுகிறது. கூட்டணிப்பா.உக்களும் மற்றும் பல தலைவர்களும் உரையாற்றுகிருர்கள்.

# 500 பேரை ஐ. தே.வுக்கு சேர்த்துத் தருகிறேன் என்ருல் அரசாங்க அதிபர் பதவியா?

"இந் நாட்டு நிருவாக சேவையிலே என்றுமில்லாத ஒரு விநோதமான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது தேர்தலிலே தோற்கடிக்கப்பட்ட ஒருவரை — பழி வாங்கும் நோக்கத்திற்காக வென்று தான் சொல்லவேணடியிருக்கிறது— யாழ்ப்பாணத்துக்கு நீங்கள் அரசாங்கஅதிபராக நியமித்திருக்கிறீர்கள், நாங்கள் அங்கே எதுவும் செய்ய முடியாமலிருக்கிறது. அவர் சென்ற தேர்தல்ல் என்னேடு போட்டியிட்டுத் தோற்றவர். சென்ற தேர்தலிலே அவர் பகிரங்கமாகக் கூட்டம் வைக்கவில்லை, இப்பொழுது அந்தக் குறையை நீக்குவதற்காக எங்கெங்கெல்லாம் வரவேற்பு ஆயத்தமாக இருக்கிறதோ அங்கங்கெல்லாம் போய்ப் பேசித் தன்னுடைய காலத்தைச் செலவிடுகிருர். நிருவாகம் செவ்வனே நடைபெறவில்லை.

''யாழ்ப்பாண மாவட்டத்தைத் தனி மாவட்டமாக்கி அங்கு அவசரகாலச் சட்டத்தை வைத்து ஒரு போர்ப்படை ஆட்சியைப் புகுத்தி, இந்த நாட்டில் இருந்து அதைப்பிரித்து, இரண்டு மாவட்ட அமைச்சர்களை அமைத்து, ஒரு வருடத்திலே மூன்று அரசாங்க அதிபர்களை அனுப்பிவிட்டு, கடைசியாக எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், தேர்தலில் தோற்ற ஒருவரை, யாழ்ப்பாணத் தொகுதிகளிலுள்ள நாம் அத்தனை பேருமே எதிர்த்ததையும் பொருட்படுத்தாமல், உங்களுடைய கட்சியின் பொம்மையாக அங்கே வைத்து உங்களுடைய கட்சியை வளர்க்கிறீர்கள். ஒருகிழமைக்கு 500 பேரை ஐ தே. கட்சிக்கு சேர்த்துத்தருகிறேன் என்று சொல்லுகின்ற அந்த முறையிலேதான் அவருக்கு அங்கே அரசாங்க அதிபர் நியமனம் கிடைத்துள்ளது. இப்படியெல்லாம் செய்து கொண்டே நீங்கள் ஒத்துழைப்பைப்பற்றிப் பேசலாமா?

பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம் (20-11-79)

## ஒளி விழா 1979

கிறீத்தவப் பண்பாட்டுப் பேரவையின் ஒளிவிழா. 1.12,79 சனிக்கிழமைமாலை 5.00 மணிக்கு கொட்டாஞ்சேனை, நல்லாயன் மகளிர் கல்லூரி மண்டபத்தில்நடைபெறும்.

இவ்விழாவிற்கு கண்டி, தேசியக் குருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்அருள் திரு. கலாநிதி விக்ரர் குறூஸ் அடிகள்பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்ருர்.

இவ்விழாவில் அருள் திரு. கலாநிதி அன்ரனிஜோன் அழகரசன் அடிகளார் கிறீத்தவப் தமிழ்ப்பண்பாட்டில் ஒளி எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார்.

பேரவை அனைத்திலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டிப் பரிசில் வழங்குவதுடன் நாட்டியம் நாடகம் முதலிய பல நிகழ்ச்சிகள் இதில் இடம் பெறும்.

## எழுத்துச்சீர்திருத்த ஆய்வரங்கு!

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஆய்வரங்கு ஒன்று இலங்கை அறிவு இயக்கத்தின் ஆதரவின் கீழ் 1.12.79 சனி மாலை 5 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை சிறிய மண்டபத்தில் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் பல தமிழறிஞர்கள் கலந்துகொள்கின்றனர்,

## ஆனந்தசங்கரி முன்வைத்த புள்ளி விபரம்

இந்நாட்டிலுள்ள 31 அமைச்சுக்களிலும் 135 உயர் அதிகாரிகள் இருக்கிருர்கள்!

அவர்களில் 13 பேர்மட்டுமே தமிழர்.

அரசாங்கத்தின் பல்வேறு ஆணைக்குழுக்கள் சபைகளில் உள்ள உயர் அதிகாரிகள் 95பேர்.

அவர்களில் 5பேர் மட்டுமே தமிழ் பேசும் இனத்தினர்.

கையேற்கப்பட்ட 16 வியாபார ஸ்தாபனங்களில் தமிழர் ஒருவரும் தகுதிவாய்ந்த அதிகாரியாக இல்லை!

18 அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் 17 கூட்டுத்தாபனங்களுக்குச் சிங்களவர்கள் தான் தலைவர்கள்!

விரைவில் மூடப்படவிருக்கும் ஒரேயொரு கூட்டுத்தாபனத்துக்கே தமிழர் ஒருவர் தலைவர்!

கூட்டுத்தாபனங்களில் 96 பேர் இயக்குநர்களாகஇருக்கின்றனர்;

இவர்களில் 7பேர் மட்டுமே தமிழர் 3பேர் முஸ்லிம் ஏனையோர் சிங்களவர்

—வி. ஆனந்தசங்கரி பா உ. (பாராளுமன்றத்தில்)

கெயிட்டி
3-வது வாரம்
(கொட்டாஞ்சேனை)
ஜெய்சங்கர், ஜெயலலிதா, சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா
நடித்த
முத்துச் சிற்பி

செல்லமஹால்
9-வது வாரம்
(கொட்டாஞ்சேனை)
சிவாஜி, சுஜாதா, விஜயகுமார், சுந்தரராஜன், நாகேஷ், மனோரமா, சத்தியப்பிரியா, சங்கீதா
நடித்த
தீபம்
ஈஸ்மன் கலர்

இப்பத்திரிகை, சிலோன், நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ந் திகதி, ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது